ED/12/1/4/ඵස්මා/2022/අභ 2021.12 . 23

கல்வி அமைச்சின் சகல பிரிவுகளினதும் பதவிநிலை உத்தியோகத்தர்கள்,

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,

சகல தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்,

சகல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்கள்,

சகல தேசிய பாடசாலைகளின் அதிபர்கள்.

**இணைந்த சேவைகள் அலுவலர்களுக்கான உள்ளக இடமாற்றம் – 2022**

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் : COM/Trans/V/ව.ජු.ම.2022 மற்றும் 2021.08.06 ஆம் திகதியுடைய 01/2021 ஆம் இலக்கம் கொண்ட இணைந்த சேவைகள் சுற்றறிக்கையுடன் தொடர்பானது.

02. இதற்கமைய 2022 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழியங்கும் சேவை நிலையங்களுக்கிடையிலான வருடாந்த இடமாற்றத்தின் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு அது தொடர்பிலான உள்ளக இடமாற்றக் கொள்கை மற்றும் இடமாற்ற விண்ணப்பப் படிவங்கள் கல்வி அமைச்சின் வலைதளத்தின் (www.moe.gov.lk) விசேட அறிவித்தலின் கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

03. உள்ளக இடமாற்றத்தினை எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை, இலங்கை அரச நூலகர் சேவை, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை, முகாமைத்துவசேவை அலுவலர் சேவை, அலுவலக ஊழியர் சேவை மற்றும் சாரதிகள் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து நிறுவனத் தலைவரினூடாக 2022.01.06 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (இணைந்த சேவைகள்) சமர்பித்தல் வேண்டும். அத்துடன் அதன் பிரதியொன்றை 0112784864 எனும் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். மேலும் 2022 ஆம் வருடத்திற்காக வருடாந்த இடமாற்றங்களைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் உள்ளக இடமாற்றத்தின் பொருட்டு விண்ணப்பிக்கப்படலாகாது என்பதனையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

03. இவ்விடயம் தொடர்பில் சகல அலுவலர்களையும் அறிவுறுத்துமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

சுபாஷினி குலதுங்க முதலி

சிரேஷ்ட உதவிச் செயலாளர் ( இணைந்த சேவைகள்)

கல்விச் செயலாளருக்காக